දුරකථන/தொலைபேசி இல./Telephone Nos.

අමාත්‍යතුමා / அமைச்சர் / Minister: 2784832, 2784807, 2785617

ලේකම් / செயலாளர் / Secretary: 2784812

කාර්යාලය / அலுவலகம் / Office: 2785141-50, **Fax**: 2784846

ඊමේල්.ඃ.ஈ-மெயில்/E-mail : isurupaya@moe.gov.lk

ඔබේ අංකය / உமது இல. / Your No.: ………………………………

අධ්‍යාපන අමාත්‍යාංශය

**கல்வி அமைச்சு**

**Ministry of Education**

"ඉසුරුපාය" , ශ්‍රී ජයවර්ධනපුර කෝට්ටේ
බත්තරමුල්ල
“இசுருபாயா“ ஸ்ரீ ஜயவர்தனபுர கோட்டை
பத்தரமுல்ல
"Isurupaya", Sri Jayawardhanapura Kotte
Battaramulla.

මගේ අංකය / எமது இல. / My No.: ED/01/44/01/1/In.C. ……….............

දිනය / திகதි / Date: 2012.12.31 ...........................

சுற்றுநிருப இலக்கம். 4/2013

சகல பீடாதிபதிகள்
சகல ஆசிரியா் பயிற்சிக் கல்லூரி விரிவுரையாளர்கள்
சகல ஆசிரியா் மத்திய நிலைய முகாமையாளர்கள்.

**ஆசிரியர் கல்விசாா் நிறுவனங்களின் பண்புசாா் தர விருத்தியினை உறுதிப்படுத்துவது தொடா்பான மதிப்பீட்டு வேலைத்திட்டம்**

கல்வி அமைச்சின் முகாமைத்துவ தர உறுதிப்பாட்டுப் பிரிவு இதுவரை நாட்டின் சகல பாடசாலைகளிலும், வலயக் கல்விக் காரியாலயங்களிலும் பண்புசாா் தர உறுதிப்பாடு தொடா்பான மதிப்பீட்டுச் செயன்முறையினை அறிமுகப்படுத்தியுள்ளது.

02. இவற்றுடன் சகல ஆசிரியா் கல்விசாா் நிறுவனங்களிலும் பண்புசாா் விருத்தி தொடா்பான தரங்கள், சுட்டிகள், நியமங்கள் என்பவற்றை அறிமுகப்படுத்தி நிறுவனத்துக்குள் சுய மதிப்பீட்டுச் செயன்முறையினை வலுப்படுத்தும் பொருட்டு, வெளிவாரி மதிப்பீட்டுக்கு உட்படுத்துவதற்குத் தீா்மானிக்கப்பட்டுள்ளது.

03. இது தொடா்பில், கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள 05 மதிப்பீட்டுத்துறைகளின் அடிப்படையில், ஆசிரியா் கல்வி நிறுவனங்களின் மதிப்பீடு தொடா்பாக மதிப்பீட்டு நியமங்கள் தயாரிக்கப்பட்டுள்ளன.

1. நிறுவன/காரியாலய முகாமைத்துவம்
2. பௌதிகவள முகாமைத்துவம்
3. மனித வள முகாமைத்துவம்
4. இணைப்பாடவிதானம் மற்றும் நலன்புரி நடவடிக்கைகள்
5. கலைத்திட்ட முகாமைத்துவம் மற்றும் வகுப்பறை மதிப்பீடு.

04. தயாரிக்கப்பட்டுள்ள நியமங்களுக்கேற்ப தங்களது நிறுவனத்தின் உள்வாரி மதிப்பீட்டு வேலைத்திட்டத்தைச் செயற்படுத்துவது தொடா்பாக சகல ஆசிரியா் கல்வி நிலையங்களினது தலைவா்களினதும் ( அதிபா் /பீடாதிபதி/ முகாமையாளா்) கவனத்தை ஈா்ப்பதோடு, கீழே குறிப்பிடப்படும் விடயங்களின் அடிப்படையில் உள்வாரி நடவடிக்கைகளை ஒழுங்குபடுத்துமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

1. உள்வாரி மதிப்பீட்டுக் குழுவினைத் தாபித்தல்.
2. மதிப்பீட்டுக்குட்படுத்தப்படவேண்டிய மதிப்பீட்டுத்துறை மற்றும் சுட்டிகளின் அடிப்படையில் எளிமையான மதிப்பீட்டுத் திட்டமொன்றினைத் தயாரித்தலும் இது தொடா்பில் நிறுவனம்சாா் பிரஜைகளுக்கு அறிவூட்டுதலும்.
3. மதிப்பீட்டுத்துறை 05 தொடா்பாகவும் 05 குழுக்களை நியமித்தல்.
4. வருடத்துக்கு இரு தடவை அக்குழுக்களின் ஊடாக அந்தந்த மதிப்பீட்டுத்துறைக்குக் கீழான நிறுவன வேலைகளை உள்வாரி மதிப்பீட்டுக்குட்படுத்துதல்.
5. மதிப்பீட்டறிக்கை தயாரிக்கும் போது உரிய பிரிவுக்கு அறிவிப்பதோடு, அறிக்கையைக் கோவையிலிட்டு வைத்தல்.
6. மதிப்பீடு செய்யப்பட்ட தினத்திலிருந்து இரு மாதங்களுக்குப் பின்னா் பின்னூட்டல் வேலைத்திட்டத்தினை மேற்கொள்ளுதல்.
7. தர வட்டங்களை அமைத்தலும் முன்னேற்றங்களை அறிக்கைப்படுத்துதலும்

05. கல்வி அமைச்சின் “ கல்விக் கல்லூரிப் பிரிவு மற்றும் ஆசிரிய கல்விப் பிரிவின் உத்தியோகத்தர் ஊடாக ஆசிரியர் கல்வி நிலையங்கள் வெளிவாரி மதிப்பீட்டுக்கு உட்படுத்தப்பட்டு அந்நிறுவனத்தின் சிறப்புக்கள் மற்றும் செய்யப்பட வேண்டிய விடயப்பரப்புக்கள் தொடர்பில் அறிந்து அவற்றுக்கான தீர்வுகளை நடைமுறைப்படுத்துவதற்கான வழிகாட்டல்களும் செய்யப்பட்டுள்ளன.

**ஒப்பம்: எஸ்.எம். கோட்டாபய ஜயரத்ன**
**கல்வியமைச்சின் செயலாளர்**

பிரதிகள்:

1. கௌரவ கல்வி அமைச்சர் - ( அறிந்து கொள்ளும் பொருட்டு)
2. கௌரவ பிரதிக் கல்வி அமைச்சர் - (அறிந்து கொள்ளும் பொருட்டு)
3. மேலதிச் செயலாளர்கள் - (அறிந்து கொள்ளும் பொருட்டு)
4. கல்விக் கல்லூரி ஆணையாளர் - (அறிந்து கொள்ளும் பொருட்டு)